**சுருக்கம்**

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை – பணிபுரியும் மகளிர் மற்றும் உயர் கல்வி பயிலும் மாணவியர் உள்ளிட்ட அனைத்து மகளிருக்கும் சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் (white board) கட்டணமில்லா பயண வசதி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்(சந–3) துறை

**அரசாணை (நிலை) எண். 19**

**நாள். 07.05.2021.**
**திருவள்ளுவர் ஆண்டு 2052**
**பிலவ, சித்திரை 24**

படிக்கப்பட்டது.

2021 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கான மாண்புமிகு முதலமைச்சரின் தேர்தல் அறிக்கை

--------

**ஆணை:-**

2021 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கான மாண்புமிகு முதலமைச்சரின் தேர்தல் அறிக்கையில், 'தமிழகம் முழுவதும் இலவசமாக உள்ளூர் பேருந்துகளில் [நகரப்பேருந்து (Town bus)] மகளிருக்கு கட்டணமில்லா பயண வசதி அளிக்கப்படும்' என வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது.

2. 2011–ஆம் ஆண்டின் மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மொத்த மக்கட் தொகையில் பெண்கள் 49.80 சதவீதமாக உள்ளனர். ஒரு மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு மகளிரின் பங்களிப்பு இன்றியமையாததாகும். தற்போதைய மாறிவரும் சமூக, பொருளாதார சூழ்நிலையில் மகளிர் உயர்கல்வி பெறுவதற்கும், குடும்பத்தின் பொருளாதார தேவையை நிறைவேற்றும் பொருட்டு பணிகளுக்குச் செல்வதற்கும், சுய தொழில் புரிவதற்கும் போக்குவரத்துத் தேவை இன்றியமையாதது ஆகும்.

3. தமிழ்நாட்டில், பணிபுரியும் ஆண்களின் விகிதத்தை கணக்கில் கொள்ளும்பொழுது பணிபுரியும் பெண்களின் விகிதம் பெருமளவு குறைவாகவே உள்ளது. 2011–ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி, பணிகளில் பெண்களின் பங்களிப்பு (Work Participation Rate) 31.8 சதவீதமாகவும் ஆண்களின் பங்களிப்பு 59.3 சதவீதமாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. பொருளாதார வளர்ச்சிக்கு மகளிரும் சிறப்பான பங்களிப்பினை நல்க இயலும் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் பணிகளில் மகளிரின் பங்களிப்பு விகிதத்தினை உயர்த்தவேண்டியது அவசியமாகிறது. உயர்கல்வி கற்பதற்காகவும், பணி நிமித்தமாகவும் பயணம் மேற்கொள்ளும் மகளிருக்கு பாதுகாப்பான பயணங்களை அமைத்துக் கொடுப்பதும், பொதுப் போக்குவரத்து பயணங்களை ஊக்குவிப்பதும், மேற்கூறிய சமூகப் பொருளாதாரத் தேவைகளுக்கு உகந்ததாக அமையும்.

த.பி.பா.